# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.32/2023

## அ.சா. 2(LW 3 )

| **பெயர்** | பெரியசாமி | **தொழில்** | |
|---|---|---|---|
| **த/ பெயர்** | சின்னக்காளை | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **12.02.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**(ஹிந்தி மொழிபெயர்ப்பாளர் பி.அரவிந்தன் முன்பு விசாரணை நடத்தப்பட்டது . விசாரணை மொழி பெயர்த்து எதிரிகளுக்கு ஹிந்தி மொழியில் விளக்கி சொல்லப்பட்டது. )**

1வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். 2வது எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மூனான்டிபட்டியில் குடியிருந்து வருகிறேன். எஸ்.எஸ் தறி மில்லில் பணிபுரிந்து வருகிறேன். நான் படிக்கவில்லை. வழக்கில் இறந்தவர் என் அக்கா மகன் ஆவார். கடந்த 24.08.2022 அன்று இரவு 08.00மணிக்கு நாகேந்திரன் எனக்கு போன் செய்து மூனான்டி பஸ்ஸ்டாப் அருகே ராம்குமாரும், ஆஜர் எதிரிகளும் சண்டை போட்டுக் கொண்டிருந்தர்கள் என்று எனக்கு தகவல் சொன்னார். நான் உடனே அங்கு சென்று என் அக்கா மகன் ராம்குமாரையும் ஆஜர் எதிரிகளையும் விலக்கி விட்டேன். அதன் பின்பு அனைவரும் வீட்டிற்கு சென்று விட்டோம். மறுநாள் காலை வீட்டிற்கு ராம்குமார் வரவில்லை என்று நானும் நாகேந்திரனும் தேடிச் சென்றோம். தேடிப்பார்த்து ஆள் கிடைக்கவில்லை. 26.08.2022 அன்று காலை 09.00மணிக்கு காவேரி மில் காம்பவுண்ட் சுவர் அருகே ராம்குமார் கிடப்பதாக தகவல் சொன்னார்கள். நான் போய் பார்த்தேன். நான் போய் பார்க்கும் போது ராம்குமாருக்கு இடது பக்க தலையிலும், இடதுபக்க காதிலும் இரத்தம் வரும்படி இறந்து கிடந்தார். போலிசார் வந்து ராம்குமாருடன் சண்டை போட்டவர்களை அடையாளம் காட்ட சொன்னார்கள். நாங்கள் தேடிச் சென்ற போது ஹிந்திகார பசங்கள் அங்கு இல்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1,2 **<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

_ சம்பவ தினத்தன்று நான் வேலைக்கு செல்லவில்லை . நாகேந்திரன் எனக்கு எந்த செல்போன் எண்ணிலிருந்து போன் செய்தார் என்று எனக்கு தெரியாது. சுமார் 08.00மணி அளவில் எனக்கு வந்தது. எனக்கு 08.00மணிக்கு போன் வந்தது என்பதற்கு போலிசாரிடம் எனது போன் கால்லிஸ்ட்டை காண்பிக்கவில்லை. போலிசாரும் செல்லை வாங்கி பார்க்கவில்லை என்றால் நான் செல் வைத்துக் கொள்வதில்லை. என்னிடம் போன் இல்லை. எங்கள் ஊர் பசங்கள் போன் கொடுத்தார்கள். யார் என்னிடம் போன் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. மூனான்டிபட்டியில் உள்ள மாரியம்மன் கோவில் எதிர்புறம் எனது வீடு அமைந்துள்ளது. நாகேந்திரன் வீடு மணீஸ் பௌண்டரி அருகே சுமார் 1/2 கிமீ தொலைவில் உள்ளது. நாகேந்திரன் அவர் போன் செய்யும்போது தான் ஆயில் மில்லில் வேலை செய்து கொண்டிருப்பதாகவும் அதனால் தன்னால் வரமுடியவில்லை என்றும் நீங்கள் போய் விலக்கி விடுங்கள் என்று சொன்னார். நான் சென்று பார்த்த போது மூனான்டி பஸ்ஸ்டாப் அருகே ராம்குமாரும், ஆஜர் எதிரிகள் இருவரும் மல்லு கட்டிக் கொண்டிருந்தார்கள். எதற்காக அவர்கள் மல்லுகட்டிக் கொண்டிருந்தார்கள் என்று தெரியாது. ராம்குமார் எனது அக்கா மகன் ஆவார். அவர்களை நான் போய் விலக்கிவிட்ட இடம் பஸ்ஸ்டாப்தான் . அந்த பஸ்ஸ்டாப் அருகே பொதுமக்கள், பஸ்க்காக காத்திருந்தவர்கள் என 10 பேர்கள் இருந்தார்கள். அந்த 10 பேரும் எங்கள் ஊர்க்காரர்கள்தான். அவர்கள் பெயர்கள் எதுவும் குறிப்பாக என்னால் சொல்ல இயலாது. ராம்குமாரும், ஆஜர் எதிரிகளும் சண்டையிட்ட போது ஆயுதங்கள் எதுவும் வைத்திருந்தார்களா என்றால் யாரும் ஆயுதம் வைத்திருக்கவில்லை. எந்த பேருந்திலிருந்து ராம்குமார் இறங்கினார் என்பது எனக்கு தெரியாது. ராம்குமார் அப்போது மது அருந்தியிருந்தாரா என்பது எனக்கு தெரியாது. நான் சண்டையை விலக்கிவிட்ட பின்பு ராம்குமார் அவரது ஊருக்கு சென்று விட்டார். எதிரிகளும் அவரது இடத்திற்கு சென்று விட்டார்கள். அவர்கள் சென்ற பின்புதான் நான் எனது வீட்டிற்கு சென்றேன். மறுநாள் நானும் வடமதுரை சார்பு ஆய்வாளரும் பன்னாரி அம்மன் குவார்ட்டர்ஸ், மூனான்டிபட்டி அம்மா குளத்தில் உள்ள ஒரு குவாட்டர்சில் தேடி சென்றோம். காலை 09,00மணிக்கு வந்து எஸ்ஐ என்னை அழைத்து சென்றார். என்னை போலிஸ் ஜீப்பில் அழைத்து செனறு தேடி பார்த்தோம். சண்டை நடந்த இடத்தில் போலிசார் தடயங்கள் எதுவும் பார்த்தார்களா என்றால் எதுவும் கிடைக்கவில்லை. இரவு 08.00மணிக்குத்தான் சண்டை நடந்தது. அந்த இடத்தில் வெளிச்சம் இருந்ததா என்றால் இல்லை. சண்டை நடந்த மறுநாள் நானும் எஸ்ஐயும் போலிஸ் ஜீப்பில் அன்று நாள்முழுவதும் பல இடங்களில் தேடி பார்த்தோம். யார் புகார் கொடுத்ததின் பேரில் எஸ் .ஐ வந்ததாக என்னிடம் சொல்லிக் கொள்ளவில்லை. நான் பிரேதம் கிடந்த இடத்திற்கு நான் செல்லும் போது பொதுமக்கள் கூட்டமாக

இருந்தார்கள். பிரேதம் கிடப்பதாக யார் எனக்கு தகவல் சொன்னார்கள் என்றால் எனக்கு பெயர், விவரம் தெரியாது. நான் போகும் போது போலிசார் அங்கு இருந்தார்கள். நான் பிரேதம் கிடந்த இடத்திற்கு போகவில்லை. நான் பிரேதம் கிடந்த இடத்திற்கு செல்லவில்லை என்பதால் ராம்குமார், அப்பா, அம்மா, அக்கா எத்தனை மணிக்கு வந்தார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. போலிசார் என்னிடம் சாட்சியாக இருக்கும்படி வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் ஞாபகம் இல்லை. போலிசார் கேட்டுக் கொண்டதற்காக இறந்தவர் என் அக்கா மகன் என்பதால் மூனான்டி பட்டி பஸ்ஸ்டாபில் சண்டை நடந்ததாகவும், நான் அதை விலக்கி விட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN
Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.12 21:16:14 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.